Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.

**SESSIONS CASE No.167/2019**

Deposition of PW5 Witness for Defence

Defence Court

Name :N.Anbarasan Calling :

Father's Name :Nagappan Village :

Age : Taluk :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the 14th day of March 2024.

(Accused is present)

முதல் விசாரணை

நான் சென்னை ராமாபுரம், செந்தமிழ் நகர் வேம்புலி தெரு, கதவு எண்.3/5 ல் குடியிருந்து வருகிறேன். நான் டாஸ்மார்க்கில் ஒரு பார் வைத்து நடத்தி வருகிறேன். நான் இவ்வழக்கு சம்பவ காலத்தில் மௌண்ட் பூந்தமல்லி சாலையில் ராமாபுரம் அருகே நான், பெரியசாமி மற்றும் நாகலிங்கம் ஆகியோருடன் பார் வைத்து நடத்திக் கொண்டிருந்தேன். இவ்வழக்கு சம்பவத்தில் இறந்து போன விவேக் எனது சொந்த ஊரான தேவகோட்டைக்கு அருகில் உள்ள ஊரை சேர்ந்தவர். அதன் மூலம் அவரை எனக்கு தெரியும். அவர் எனது கடையில் சமையல் மாஸ்டராக பணியாற்றி வந்தார். அவருடன் அஜித், சரவணன், கோகுல்நாத், வெற்றி செல்வன் மற்றும் பெரிய சாமி ஆகியோர் பணியாற்றி வந்தார்கள். 28.05.2019 அன்று நான் திருவிழாவிற்காக எனது சொந்த ஊரான தேவகோட்டைக்கு சென்றிருந்தேன். அங்கிருந்த போது, 31.05.2019 அன்று காலை 05.00 மணியளவில், எனது பார்ட்னர் பெரிய சாமி எனக்கு போன் செய்து 30.05.2019 க்கும் 31.05.2019 க்கும் இடைப்பட்ட நள்ளிரவு 12.00 மணியளவில் அஜித்துக்கும் விவேக்கிற்கும் நடந்த பிறந்த நாள் கொண்டாட்டத்தில் இருவருக்கும் வாய் தகராறு ஏற்பட்டு அஜித் விவேக்கை கடாய்-ல் அடித்துவிட்டார்

என்று கூறினார். மேலும் விவேக்கிற்கும் அஜித்திற்கும் மருத்துவ மனைக்கு சென்று தையல் போட்டு வந்துள்ளதாக, அவர்கள் இருவரும் மற்றும் பெரியசாமி ஆகியோர் என்னிடம் கூறினார். ஆஜர் எதிரி தான் மேற்கூறிய அஜித். அதன் பின்னர் விவேக்கின் ஊரை சேர்ந்த, எம்.எம்.டி,ஏ காலனியில் உள்ள எனது டாஸ்மார்க் பாரில் பணிபுரிந்து வந்த ரமேஷ் என்பவரிடம் நடந்த சம்பவத்தை பற்றி கூறி அவரை விவேக்கி்ன் குடும்பத்தினரிடம் தகவல் தெரிவிக்க சொன்னேன். 31.05.2019 அன்று மாலை நேரத்தில் எனக்கு பெரியசாமி மற்றும் ரமேஷ் ஆகியோர் போன் செய்து விவேக் சுயநினைவற்று ராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவ மனையில் இருப்பதாக கூறினார்கள். ரமேஷ் காவல் நிலையத்தில் அஜித் பேரில் புகார் கொடுக்கவு்ள்ளதாக என்னிடம் கூறினார். நான் அதற்கு அவரிடட்ம புகார் கொடுக்க சொல்லிவிட்டேன். நான் சென்னைக்கு 02.06.2019 அன்று திரும்பியவுடன் மருத்துவ மனைக்கு சென்று விவேக்கை பார்த்தேன். அதன் பின்னர் 03.06.2019 அன்று இரவு 10.00 மணியளவில் விவேக் இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் 26.05.2019 அன்று எனது ஊருக்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். பெரியசாமி, அஜித், விவேக் ஆகியோர் எனது பாரில் வேலை பார்த்து வந்தவர்கள் என்றால் சரிதான். பிறந்த நாள் விழா நடைபெற்ற நள்ளிரவு 12.00 மணியளவில் பார் செயல்பட அனுமதி கிடையாது என்றால் சரிதான். விவேக்கிற்கும் அஜித்திற்கும் ஒரே நாளில் பிறந்த நாள் வருவதை முன்னிட்டு நடைபெற்ற கொண்டாத்தில் கலந்து கொண்ட நபர்கள் மது அருந்தியிருந்தார்கள் என்றால் சரிதான். அஜித்திற்கும் விவேக்கிற்கும் ஒரே பிறந்த நாளாக இருந்தால் கூட விவேக் அஜித்தை விட மூத்தவர் என்றால் எனக்கு தெரியாது. விவேக் ஏற்கனவே போதை மருந்து அருந்தி வந்ததால் அவரது உடல் பாகங்கள் பலவீனம் அடைந்து அவர் மருத்துவ மனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டு வந்தரார் என்றால் சரிதான். சம்பவத்தின் போது என்ன நடந்தது எப்படி நடந்தது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவத்திற்கு பின்னர் விவேக் மருத்துவ மனைக்கு சென்று வெளி நோயாளியாக சிகிச்சை எடுத்து கொண்டு

வீடு திரும்பிவிட்டார் என்றால் சரிதான். அதன் பின்னர் விவேக் தனது போதை மற்றும் மது அருந்தும் பழக்கத்தின் காரணமாக ஏற்பட்ட உடல் உபாதைகளின் காரணமாக தான் அவர் இறந்துவிட்டார் என்று சொன்னால் எனக்கு அது பற்றி தெரியாது. ஆதலால் இந்த வழக்கு அஜித்தின் மீது சந்தேகத்தின் மீது போடப்பட்ட வழக்கு என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. எதிரிக்கும் விவேக்கின் இறப்பிற்கும் சம்மந்தமில்லை என்றும் விவேக் தனது போதை மற்றும் மது அருந்தும் பழக்கத்தின் காரணமாக ஏற்பட்ட உடல் உறுப்புகள் செயலிழந்ததன் காரணமாக இறந்துவிட்டார் என்றும் சொன்னால் எனக்கு அது பற்றி தெரியாது.